දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය
தொலைபேசி
Telephone 021-222 2235
ෆැක්ස්
பக்ஸ்
Fax 021-222 2355
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி
General Telephone 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No. JF/DPS/PS/Wanaropa/II/01/2019

ඔබේ අංකය / உமது எண் / Your No.

දිනය / திகதி / Date 27.01.2020

**பிரதேச செயலாளர்,**
பிரதேச செயலகம்,
நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி.

**"72 ஆவது தேசிய தின விழா – 2020**

மேற்படி விடயம் தொடர்பாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் HA/01/02/01/01/2020 ம் இலக்க 06.01.2020 ந் திகதிய கடிதம் சார்பானது,

அதி மேதகு சனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அவர்களினுடையதும், கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினுடையதும் வழிகாட்டலின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ ஜனக பண்டார தென்னகோன் அவர்களின் செயற்பாட்டில் 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 04ம் திகதியன்று காலை 8.00 மணிக்கு 72 ஆவது தேசிய தின விழா சுதந்திர சதுக்கத்தில் மிகவும் பெருமையுடன் கொண்டாடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

72 ஆவது தேசிய தின விழாவினை அனைத்து மாவட்டங்களின் பிரதேச செயலக பிரிவுகளில் மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை நாட்டுவதற்கும் மற்றும் சிரமதானப் பணியில் ஈடுபடுவதற்கும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்தல் வழங்கியுள்ளது. எனவே அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய 2020.01.31 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மாவட்ட செயலகத்தில் மரக்கன்றுகளை பெற்று இனங்காணப்பட்ட விசாலமான இடங்களில் நாட்டுவதற்கு கிராம மட்ட அமைப்புக்கள், மதஸ் தலங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியினைப் பெற்று தகுந்த ஆக்கபூர்வமான நிகழ்ச்சித்திட்டத்தினைத் தயாரித்து, அதற்கிணங்க குறித்த திகதியில் காலை 8.30 மணிக்கு மரம் நடுகையினை வைபவரீதியாக மேற்கொள்ளுமாறும், சகல வீட்டுத் தோட்டங்களிலும் பழக்கன்றுகள், உணவுப்பயிர்கள், மருத்துவ தாவரங்கள் மற்றும் ஏனைய பயன்தரும் தாவரங்களை நடுவதையும் உறுதிப்படுத்துவதுடன், நகர்புற நகரங்களில் மலர்ச்சாடிகளில் மூலிகை, பழச்செடிகளை நடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலும் மரநடுகை நிகழ்வு மற்றும் சிரமதானப் பணிகள் தொடர்பான புகைப்படங்களை அமைச்சின் கோரிக்கைக்கு அமைய 2020.02.05 ம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைப்பதற்கு, மாவட்ட செயலக திட்டமிடல் கிளையின் மின்னஞ்சல் முகவரிக்கு [email:ddpdpsjaffna@jaffna.com] மென்பிரதியாக காலதாமதமின்றி கிடைக்கச்செய்யுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

**நா. வேதநாயகன்,**
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

நா. வேதநாயகன்
அரசாங்க அதிபர்/
மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்

பிரதி :- செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, கொழும்பு - 07.